


പ്രളയ ബാധിതരായ കേരളകൗമുദി ഏജന്റുമാർക്ക് ചെന്നൈ തിരുവള്ളൂർ പാന്നൂർ ചെയ്സ് സഹകരണത്തോടെ സമാഹരിച്ച ദുരിതാശ്വാസ കിറ്റുകളുടെ വിതരണം കുട്ടനാട് പുന്നക്കുന്നം ഏജന്റ് വാസുദേവന് കൈമാറി ചെയ്സ് എക്സിക്യൂട്ടീവ് ഡയറക്ടർ ബി. വിൻസന്റ് പോൾ ഉദ്ഘാടനം ചെയ്യുന്നു. എസ്.എൻ.ഡി.പി യോഗം കുട്ടനാട് യൂണിയൻ അഡ്മിനിസ്ട്രേറ്റർ പി.എസ്.എൻ. ബാബു, സന്തോഷ് ശാന്തി, കേരളകൗമുദി ആലപ്പുഴ യൂണിറ്റ് ചീഫ് സി.പി. സുരേന്ദ്രൻ, കുട്ടനാട് ലേഖകൻ പ്രസാദ് രാമങ്കരി തുടങ്ങിയവർ സമീപം

23.09.2018



திருவள்ளூர் மாவட்ட சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் நிறுவனர் வின்சென்ட்பால் தலைமையில் கேரள மாநிலம் ஆலப்புழா பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டு உபயோகப்பொருட்கள் வழங்கப்பட்டது.

18.09.2018

# சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் முதியோர், மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

## வேணுகோபால் எம்.பி பங்கேற்பு




திருவள்ளூர்,மே,12.

கடம்பத்தூர் ஒன்றியம் பண்ணூர் ஊராட்சி சூசைபுரத்தில் சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் ஏழை,எளிய மாணவ,மாணவியருக்கும்,முதியோர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

**250 ஏழை, எளிய**

விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பி.வேணுகோபால் பங்கேற்று 250 ஏழை,எளிய மாணவ, மாணவியருக்கு நோட்டுப்புத்தகம், புத்தகப்பை,பேனா,பென்சில்,ஜாமன்ரிபாக்ஸ்,ஸ்கெட்ச் பென்சில் மற்றும் 115 முதியோர்களுக்கு வேட்டி,சேலை, போர்வை, கைத் துண்டு, மளிகை பொருட்களை வழங்கினார்.மாணவ,மாணவியருக்கு கல்வியின் முக்கியத்துவம்,ஒருவருக்கொருவர் நட்பு பாராட்டுதல் போன்றவற்றை மாணவர்களுக்கு திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் எடுத்துரைத்தார்.விழாவில் சேஸ் தொண்டு நிறுவன செயலர் வின்சென்ட் பால் தலைமை தாங்கினார்.விழாவில் ஜி.மோகன்ராம்,அ.தி.மு.க கடம்பத்தூர் ஒன்றிய கழக செயலாளர் சூரகாபுரம் சுதாகர் உட்பட முதியோர்கள், பள்ளி மாணவர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.சேஸ் தொண்டு நிறுவனம் வி.மரியா விழா நிறைவாக நன்றி கூறினார்.

12.05.2018



# An Adventurous Way to Educate Rural Youth

Putting their children through school and college is a dream and alsö a challenge for any parent. But the bigger problem is convincing kids to stay at school and enable an atmosphere of learning. For kids in the rural areas, both are difficult. That's where Community Health, Housing and Social Education (CHHASE) plays a very important role.

Launched in 2001, this grassroots NGO nurtures the potential of the rural and tribal youth to be contributors to a more positive world through adventure-based learning and service to family, community and nature

Its first project was on eradication of child labour through the Sarva Sikhska Abhiyan in Tiruvallur district. In May 2004, CHHASE started child labour schools in three villages with 147 tribal children and 36 alternative and innovative education centres. Today, the situation in Tiruvallur district is drastically different with CHHASE educating over 8,000 out-of-school children and mainstreaming them in formal schools.

After eradicating child labour, CHHASE has moved to the next level by implementing the 'after school education programme', to enhance children's learning capacity. Underprivileged kids study in private schools get school kit, fee and clothing among other things from CHHASE. Children with disabilities get tricycles, spectacles and hearing aids. CHHASE has provided 22 tricycles, two spectacles and seven hearing aids to children till date. Tribal children are also provided dinner and clothing.

The NGO is also working to reduce global warming by starting tree plantation and awareness programmes in schools and in wasteland. It has planted about 1.28 lakh trees over the last 12 years.

CHHASE undertakes various training programmes for the rural youth and women based on the local needs. The programme aims at developing leadership and entrepreneurial quality through vocational and technical training programme.

The scheme is directed towards preventing migration of rural youth to cities by enabling them to realise that agriculture and agriculture related services are as rewarding occupations as working in urban areas.

It also tries to create new skills among rural youth to enable villages to become self-reliant. It provides trainings in computer basics, animation and multimedia, hardware maintenance, DTP, computer teacher training, medical lab technician, tailoring, embroidery, artificial jewellery making, beauty-related courses, capacity building and leadership and mentoring programmes. It also provided over 200 free tailoring machines and 15 embroidery cots to poor women to start their own business to come out of poverty.

Going forward, CHHASE plans to provide higher education scholarship to 310 school and college students, plant 3 lakh saplings, train 10,000 youth in various skills by 2018, provide monthly groceries to 100 neglected elderly women and construct old age home for 50 neglected elders.



*Trainings are great opportunity to under privileged youth and women to start their own business or to get a job to come out of poverty*

**— Vincent Paul B**
Director, CHHASE

01.10.2015

### செங்கத்தில்

# இலவச தையல் இயந்திரம் வழங்கும் விழா

**செங்கம், மார்ச் 24–** செங்கம் அடுத்த மேல் மன் மலை கிராமத்தில் சேஸ் தொண்டு நிறுவனத்தின் மூலம் ஏழை எளிய 30 பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி அளிக்கப்பட்டு, மேலும் பயிற்சியில் சிறப்பாக பயிற்சி பெற்ற 6 பெண்களுக்கு இலவசமாக பண்ணூர், திருவள்ளூர் மாவட்ட சேஸ் தொண்டு நிறுவனம், மூலமாக தையல் இயந்திங்களை இத் தொண்டு நிறுவன இயக்குனர் வின்சென்ட் பவுல் வழங்கினார்.

மேலும் வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நலிந்த ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் சேஸ் தொண்டு நிறுவன இயக்குனர் வின்சென்ட் பவுல், சேஸ் நிறுவன மேற்பார்வையாளர் அம்மாவாசை மற்றும் தையல் பயிற்சி ஆசிரியர்கள் தாமரைச்செல்வன், விருத்தாள், ரேவதி ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

24.03.2015



கடம்பத்தூர்ஒன்றியம்கண்ணூர்ஊராட்சியில்சேஸ்தொண்டு நிறுவனம் சார்பில் முதியோருக்கான டே கேர் சென்டரில் 25 ஆதரவற்ற ஏழை முதியோர்களுக்கு வேட்டி, சேலைகளை சேஸ் தொண்டு நிறுவன இயக்குனர் வின்சன்ட் பவுல் வழங்கியபோது எடுத்தபடம்.

29.01.2015

# தனியார் தொண்டு நிறுவனம் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு புத்தகப் பை

**ஸ்ரீபெரும்புதூர், ஜூன் 11:** தனியார் தொண்டு நிறுவனம் சார்பில் வன்னியன்சத்திரம் அரசுப் பள்ளியில் பயிலும் 50 மாணவர்களுக்கு இலவசமாக புத்தகப் பை வழங்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஸ்ரீபெரும்புதூரை அடுத்தமண்ணூர் பகுதியில் சேஸ் தொண்டு நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இத்தொண்டு நிறுவனம் சார்பில் திருவள்ளூர் மாவட்டம், வானியன் சத்திரம் அரசுப் பள்ளியில் பயிலும் 50 ஏழை எளிய மாணவர்களுக்கு இலவசமாக புத்தகப்பை வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, சேஸ் தொண்டு நிறுவன இயக்குநர் வின்சென்ட் பால் தலைமை தாங்கினார். சேஸ் தொண்டு நிறுவனத்தினர் ஒருங்கிணைப்பாளர் ரமேஷ், ஐபிடிஏ தொண்டு நிறுவன இயக்குநர் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில், இந்தியன் வங்கியின் கோடுவள்ளி கிளை மேலாளர் அனந்தராமன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஏழை எளிய மாணவர்கள் 50 பேருக்கு இலவசமாக புத்தகப்பைகளை வழங்கினார்.

விழாவில், பொதுமக்கள் மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



விழாவில், மாணவர்களுக்கு இலவசமாக புத்தகப் பைகளை வழங்குகிறார் வங்கி மேலாளர் அனந்தராமன்.

12.06.2015




திருவண்ணாமலை அடுத்த புதுப்பாளையத்தில் செஸ் தொண்டு நிறுவனம் சார்பில் நடந்த பயிற்சி முகாம் நிறைவு நாள் அன்று பயிற்சி பெற்ற ஏழை பெண்களுக்கு இலவச தையல்மிஷன்களை தொண்டு நிறுவன இயக்குனர் வின்செண்ட் பால் வழங்கினார். அருகில் பேரூராட்சி உறுப்பினர்கள் ஜஸ்டின் பாண்டியன் ஜெயபிரகாஷ் சென்னம்மாள் கலைவாணி ஆகியோர் உள்ளனர்.

# புதுப்பாளையத்தில் செஸ் தொண்டு நிறுவனம் சார்பில் இலவச தையல் இயந்திரம்: பேரூராட்சி உறுப்பினர் ஜஸ்டின் பாண்டியன் வழங்கினார்

திருவண்ணாமலை, மே 10

திருவண்ணாமலை மாவட்டம் புதுப்பாளையத்தில் நடந்த முகாமில் செஸ் தொண்டு நிறுவனம் சார்பில் இலவச பயிற்சி பெற்ற ஏழை பெண்களுக்கு தையல் இயந்திரங்களை புதுப்பாளையம் பேரூராட்சி உறுப்பினர் ஜஸ்டின் பாண்டியன் வழங்கினார்.

புதுப்பாளையத்தில் செஸ் ண்டு நிறுவனம் சார்பாக கிராமப்புற ஏழை சேர்ந்த ஏழை பெண்களுக்கு இலவசமாக தையல் பயிற்சி நடத்தப்பட்டு அதன்மூலம் பயிற்சி நிறைவு பெற்ற பெண்களுக்கு இலவச தையல் மிஷன் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவுக்கு செஸ் தொண்டு நிறுவன இயக்குநர் வின்செண்ட் பால் தலைமை தாங்கினார். விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட புதுப்பாளையம் பேரூராட்சி உறுப்பினர் ஜஸ்டின் பாண்டியன் புதுப்பாளையம் [illegible] ... இலவசமாக தையல் பயிற்சி அளிக்கப்பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரங்களை வழங்கினார். இந்த விழாவில் பேரூராட்சி உறுப்பினர் ஜெயப்பிரகாஷ் சென்னம்மாள் மற்றும் கலைவாணி, தொண்டு நிறுவன பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், மகளிர் குழுவைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் செஸ் தொண்டு [illegible]

10.05.2015

# பள்ளி மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி முகாம்

ஸ்ரீபெரும்புதூர், ஜூன் 1: தனியார் தொண்டு நிறுவனம் சார்பில் பள்ளி மாணவர்களுக்கான ஒருமாத கால இலவச சிறப்புப் பயிற்சி முகாம் நிறைவு விழாவில் நலிந்தோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மண்ணூரை அடுத்த கீழச்சேரி பகுதியில் இயங்கும் புனிதவளனார் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்கு சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் ஒரு மாத கோடை கால இலவசப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

இதில் பள்ளி மாணவர்களுக்கு பேச்சு பயிற்சி, இசைப் பயிற்சி, ஓவியப் பயிற்சி, கராத்தே பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இப்பயிற்சி வகுப்புகள் நிறைவு விழா பள்ளி வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு, சேஸ் தொண்டு நிறுவனத்தின் செயலர் வின்சென்ட் பால் தலைமை தாங்கினார்.

புனித வளனார் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் எட்வர்ட் ராபின் முன்னிலை வகித்தார்.

விழாவில், ராஜீவ்காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு மைய உதவிப் பேராசிரியர் இரணிய கைலாஷ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட மாணவர்களுக்குப் பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுப் பொருள்கள் வழங்கினார்.

விழாவில் சேஸ் தொண்டு நிறுவன ஒருங்கிணைப்பாளர்கள் ரமேஷ், ராயன் ராபர்ட், பத்மநாபன், நந்தினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

02.06.2015




திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் வேணுகோபால் மாற்றுத்திறனாளிக்கு, சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் பவர் தையல் இயந்திரம் வழங்கியபோது எடுத்தபடம். உடன் சேஸ் தொண்டு நிறுவன இயக்குனர் வின்சன்ட்பால், ஒருங்கிணைப்பாளர் பஞ்சாட்சரம் உட்பட பலர் உள்ளனர்.

10.03.2015

## தகவல் தொழில்நுட்ப பயன்பாடு குறித்து இளைஞர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கம்



திருவள்ளூர்,செப்,26.

திருவள்ளூர் மாவட்டம் மப்பேடு ஊராட்சியில் உள்ள சேஸ் தொண்டு நிறுவன அலுவலகத்தில் ராஜீவ்காந்தி தேசிய இன்ஸ்ட்யூட் ஆப் இளைஞர் வளர்ச்சி நிறுவனமும்,ஆசிய பசுபிக் பிராந்திய ஊரக வளர்ச்சி நிறுவனமும் இணைந்து கிராமப்புரங்களில் உள்ள இளைஞர் மற்றும் இளம்பெண்களுக்கு தகவல் தொழில் நுட்பம் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு பயிற்சி நடத்தியது.

பயிற்சிக்கு சேஸ் தொண்டு நிறுவன தலைவர் வின்செண்ட்பால் தலைமை தாங்கினார்.இன்போ லேடி என்ற பெயரில் ஏழை,எளிய மக்களுக்கு விவசாயம்,ஆரோக்கியம் போன்ற செயல்பாடுகள் குறித்தும், அக்கா என்ற பெயரில் தகவல் தொழில்நுட்ப பயன்பாடு குறித்து இளைஞர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சிகள் நடைபெற்றது.

இத்திட்டம் பங்களாதேஷில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் இந்தியா முழுவதிலும் உள்ள கிராமப்புரங்களில் செயல்படுத்த வேண்டும் என கருத்தரங்கில் கலந்து கொண்ட 60-க்கும் மேற்பட்ட வாழ்ந்து காட்டுவோம் திட்ட உறுப்பினர்கள்,தொண்டு நிறுவன நிர்வாகிகள் மற்றும் இளைஞர்களுகளிடம் கூறப்பட்டது.

இப்பயிற்சியை ஆசிய பசுபிக் பிராந்திய ஊரக வளர்ச்சி நிறுவன பயிற்சியாளர் முகமது முசரம் உசேன்,கோபிநாத் ஆகியோர் தகவல் தொழில்நுட்ப பயன்பாடு குறித்து இளைஞர்கள்.தொண்டு நிறுவன நிர்வாகிகளுக்கு பயிற்சி அளித்தனர்

26.09.2015

## சிறப்புப் பள்ளி மாணவர்களுக்கு இலவச புத்தகப் பைகள்



சிறப்புப் பள்ளி மாணவர்களுக்கு புத்தகப் பை மற்றும் நோட்டுப் புத்தகத்தை வழங்குகிறார் திருவள்ளூர் நகர்மன்றத் தலைவர் பாண்டியன்.

திருவள்ளூர், அக். 22: திருவள்ளூரை அடுத்த தாவூத்கான்பேட்டையில் உள்ள சிறப்புப் பள்ளி மாணவர்களுக்கு சேஸ் தொண்டு நிறுவனம் மூலம் இலவச புத்தகப்பைகள், நோட்டுப் புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி வார்டு கவுன்சிலர் நந்தகோபால் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

சேஸ் தொண்டு நிறுவன இயக்குநர் வின்செண்ட்பால் வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் நகர்மன்றத் தலைவர் பாண்டியன் பங்கேற்று மாணவர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் மற்றும் புத்தகப் பைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் போது தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த முரளி, அம்பிகா, ராஜ்மாதா, உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

23.10.2015

# திருவள்ளூரில் சர்வதேச மகளிர் தின விழா



திருவள்ளூர், மார்ச்.20-

திருவள்ளூர் கபீர் மஹாலில் புதுவாழ்வு திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தின விழாவை மாவட்ட ஆட்சித் தலைவர் கொ.வீரராகவராவ் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

மாவட்ட கலெக்டர் தலைமையுரையாற்றுகையில் "நம் நாட்டின் கலாச்சாரத்தில் பெண்கள் முதல் இடத்தில் உள்ளார்கள், தாய்நாடு, தாய் மண், தமி;ழ்;த் தாய், தாய் மொழி என அனைத்தும் பெண்களின் வடிவாகவே உள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் 15,600 சுய உதவிக்குழுக்களில் 2 லட்சத்து 36 பெண்கள் உள்ளனர். இவர்களுக்கு இது வரை ரூ.170 கோடிக்கான பல்வேறு நிதியுதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மனிதனாக பிறந்த எல்லோரிடமும் திறமை உள்ளது, அதை வெளியே கொண்டு வரவேண்டும். பெண்களின் முன்னேற்றத்திற்கு பெண்கள் தான் காரணம் திறன்களை வளர்த்து மென்மேலும் உயர வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

மகளிர் தின உறுதி மொழியை மாவட்ட ஆட்சித் தலைவர் வாசிக்க அனைவரும் உறுதி ஏற்றனர். ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.1 லட்சம் வீதம் 23 கூட்டமைப்புகளுக்கு 23 லட்சம் வழங்கினார், சிறந்த மகளிர் சுய உதவி குழுக்களுக்கு விருதுகளையும், சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் அழகுக் கலை, டிடிபி பயிற்சி முடித்த 45 மகளிருக்கு சான்றிதழ்களையும் பெண்களின் முன்னேற்றம், பெண்களுக்கு தன்னம்பிக்கை வேண்டும், பெண்களின் வளர்ச்சி ஆகிய தலைப்புகளில் கருத்துரை வழங்கிய பெண்களுக்கு விருதுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் கொ.வீரராகவராவ் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் புதுவாழ்வு திட்ட மாவட்ட திட்ட மேலாளர் எஸ்.சிவகாமி கிருஷ்ணா, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் எஸ்.வீரனன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ஜெயஸ்ரீ, புதுவாழ்வு உதவி திட்ட மேலாளர்கள் கந்தசாமி, ரமேஷ், அசோகன், சேஸ் தொண்டு நிறுவன இயக்குநர் வின்சன்ட்பால், ஞானாம்பாள் சேவை மையம் அருட்சகோதரி பிரபா, மகளிர் சுய உதவிக் குழுவினர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

20.03.2015

## வைத்தீஸ்வரன்கோவிலில்

# இலவச தையல் பயிற்சி மையம் துவக்கம்

சீர்காழி, ஆக. 29: சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோவிலில் திருவள்ளூர் மாவட்டம் மப்பேட்டில் இயங்கி வரும் சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் இலவச தையற்பயிற்சி மையம் துவக்க விழா நடந்தது. சீர்காழி எடிட் அறக்கட்டளை செயலாளர் மாசிலா நெடுஞ்செழியன் தலைமை வகித்தார். தொழிலதிபர் அலெக்ஸாண்டர், செழியன், தனபால் முன்னிலை வகித்தனர். பயிற்சி மையத்தை தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை பட்டதாரி ஆசிரியர் சங்க மாநில தலைவர் பாக்கியராஜ் திறந்து வைத்தார். எடிட் அறக்கட்டளை களப்பணியாளர்கள் ராஜா, சுந்தர், வினோத், முருகுபாண்டியன் பங்கேற்றனர். சேஸ் நிறுவன திட்ட ஒருங்கிணைப்பாளர் பஞ்சாட்சரம் நன்றி கூறினார்.

29.08.2016



கடம்பத்தூர் ஒன்றியம் மப்பேடு ஊராட்சியில் உள்ள சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் 7 மகளிருக்கு மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் வீரண்ணன் தையல் இயந்திரங்கள் வழங்கியபோது எடுத்தபடம்.உடன் உதவி திட்ட அலுவலர் செல்வகுமார்,சேஸ் தொண்டு நிறுவனர் வின்சன்ட்பால்,பஞ்சாட்சரம்,மகாலட்சுமி உள்ளனர்.

30.03.2015

சட்டநாதபுரத்தில்

## 6 பேருக்கு தையல் இயந்திரம்

சீர்காழி, ஜூன் 27: சீர்காழி அருகே சட்டநாதபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில்சேஸ்தொண்டு நிறுவனம் சார்பில் 60 பள்ளி மாணவர்களுக்கு இலவச புத்தகப்பை, ஏழை பெண்கள் 6 பேருக்கு சுயதொழில் தொடங்க தையல் இயந்திரங்கள் வழங்கும் விழா நடந்தது. சட்டநாதபுரம் ஊராட்சி தலைவர் தெய்வமணி தலைமை வகித்தார்.


தலைமை ஆசிரியர் ராஜசேகர்முன்னிலைவகித்தார். சேஸ் தொண்டு நிறுவன ஒருங்கிணைப்பாளர் பஞ்சாட்சரம்வரவேற்றார். எடிட் அறக்கட்டளை நிர்வாகி மாசிலாநெடுஞ்செழியன், இந்திராணி, தமிழரசி, தனபால்,ரஞ்சித்கண்ணன் ஆகியோர் பங்கேற்று புத்தக பைகள் மற்றும் தையல் இயந்திரங்கள் வழங்கினர். இதில் கோவிரமேஷ், தமிழ்வேல், முருகுபாண்டியன், இளையராஜா கலந்து கொண்டனர். செல்வி சூர்யா நன்றி கூறினார்.

27.06.2016



கடம்பத்தூர் ஒன்றியம் கல்லம்பேடு ஊராட்சியில் உள்ள புனித பிரான்சிஸ் சவேரியர் ஆர்.சி.எம் நடுநிலைப்பள்ளியில் சேஸ் தொண்டு நிறுவனம் மற்றும் சி.பி.ஆர் பவுன்டேசன் இணைந்து தேசிய சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்,மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது. விழாவில் சேஸ் தொண்டு நிறுவன இயக்குநர் வின்சன்ட்பால்,பஞ்சாட்சரம்,அருட்தந்தை ஜான்பீட்டர்,தலைமை ஆசிரியர் டிக்ரூஸ்அருள்ராஜ்,ஆசிரியர்கள் போஸ்கோ உட்பட பலர் பங்கேற்றனர்.

27.02.2015



கடம்பத்தூர்ஒன்றியம்பண்ணூர்சூசைபுரத்தில்சேஸ்தொண்டு நிறுவனம் சார்பில் மாலை நேர பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டுப்போட்டிகள்,கலை நிகழ்ச்சிகள் நடந்தது. விழாவில் சேஸ் தொண்டு நிறுவன இயக்குனர் வின்சன்ட் பவுல்,பங்கு தந்தை கே.டி.ராய்,ராயன்ராபர்ட்,மாலை நேர ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## தையல் பயிற்சி 'சேஸ்' தொண்டு நிறுவனம்

திருவள்ளூர் மாவட்டம் மப்பேடு 'சேஸ்' தொண்டு நிறுவனத்தின் மூலம் மண்ணைச்சநல்லூரில் கடந்த மூன்று மாதங்களாக பெண்களுக்கான தையல் பயிற்சி நடைபெற்றதில் முப்பது பயிற்சியாளர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

இந்தசிறப்பான தையல் பயிற்சி பெறுவதற்கு உதவிய 'சேஸ்' தொண்டு நிறுவனத்தின் இயக்குனர் திரு. பி. வின்சென்ட் பால் அவர்களுக்கும் திரு. பி. பஞ்சாட்சரம் மற்றும் நிறுவனத்தை சார்ந்த அலுவலர்களுக்கும் பயிற்சி பெற்றவர்கள் நன்றியினை நிறைவுவிழாவில் தெரிவித்துக்கொண்டனர்.

98426 31585 - பத்மநாதன்
99767 16515 - பாண்டியன்

28.01.2015 23.02.2016

### திருமணிக்குப்பம் ஊராட்சியில்

# சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் பள்ளி மாணவ,மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள்



திருவள்ளூர், மார்ச்.07- திருவள்ளூர் மாவட்டம் பேரம்பாக்கம் அடுத்துள்ள திருமணிக்குப்பம் ஊராட்சியில் சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது.

சேஸ் தொண்டு நிறுவனத்தால் திருமணிருப்பம் ஊராட்சியில் மாலை நேர வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் 10 இருளர் இனப் பிள்ளைகளும்,24 மற்ற பிள்ளைகளும் படித்து வருகின்றனர். மாணவர்கள் புத்தகங்கள் சுமந்து செல்ல பைகள் இல்லை என்பதை கருத்தில் கொண்டு ரூ.200 மதிப்பில் 34 மாணவர்களுக்கும் பைகள்,உடைகள் வழங்கும் விழா சேஸ் அமைப்பு வளாகத்தில் நடந்தது.

விழாவிற்கு சேஸ் தொண்டு நிறுவன இயக்குனர் வின்சன்ட்பவுல் தலைமை தாங்கினார். திருமணிக்குப்பம் ஊராட்சி நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியை கருணா சிறப்பு அழைப்பாளராக . கலந்து கொண்டு 10 இருளர் பிள்ளைகளுக்கும்,24 மற்ற பிள்ளைகளுக்கும் புத்தகங்கள் சுமந்து செல்லவும், இருளர் இன பிள்ளைகள் உடுத்துவதற்கு நல்ல உடைகளையும் சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் வழங்கினார்.

முன்னதாக உதவி தலைமை ஆசிரியர் கன்னியப்பன்,மாலை நேர வகுப்பு ஆசிரியை ரேவதி ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள். 34 மாணவர்களுக்கு பைகள், துணிகள் வழங்கப்பட்டது. விழாவில் பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள்,ஆசிரியர்கள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

07.03.2015

## சேஸ் தொண்டு நிறுவனம் மூலம் மாணவர்களுக்கு

# நலதிட்ட உதவிகள் வேணுகோபால் எம்.பி. வழங்கினார்

**திருவள்ளூர், ஜூலை 1-**

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட மப்பேடு கிராமத்தில் சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் நல திட்ட உதவிகள் வழங்கும் விழா அந்நிறுவனத்தின் செயலாளர் வின்சன்ட் பால் தலைமையில் நடந்தது.

தொண்டு நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் ரமேஷ், பத்மநாபன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒருங்கிணைப்பாளர் சி.ராயன்ராபர்ட் வரவேற்றார். இந்த விழாவில் திருவள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர் பி.வேணுகோபால் கலந்து கொண்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு 200 பேருக்கு ரூ.44 ஆயிரம் மதிப்பில் புத்தக பைகள் ரூ.25 ஆயிரம் மதிப்பில் 5 பேருக்கு கை மிதி வண்டி சைக்கிள்கள், ரூ.50 ஆயிரம் மதிப்பில் 10 பெண்களுக்கு தையல் இயந்திரம் உள்பட மொத்தம் 215 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசினார்.

இந்த விழாவில் கடம்பத்தூர் ஒன்றியக்குழு தலைவர் இரு.வே.தட்சணாமூர்த்தி, துணை தலைவர் வி.ஆர். ரமேஷ், இயக்குநர் ஏ.குமார், கவுன்சிலர்கள் எட்டியப்பன், எம்.ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் ஆசிர்வாதம், ஏசுதாஸ், முன்னாள் தலைவர் குமார் உள்பட ஏராளமானோர் கலந்து பேசினார்கள். எம்.ரமேஷ் நன்றி கூறினார்.

01.07.2015

# செங்கத்தில் இலவச தையல் எந்திரம் வழங்கும்விழா




**செங்கம், மார்ச்-24,**

செங்கம் அடுத்த மேல் மன்மலை கிராமத்தில் சேஸ் தொண்டு நிறுவனத்தின் மூலம்ஏழை எளிய 30 பெண்களுக்கு இலவசதையல்பயிற்சி அளிக்கப்பட்டு, மேலும் பயிற்சியில் சிறப்பாக பயிற்சி பெற்ற 6 பெண்களுக்கு இலவசமாக பண்ணூர், திருவள்ளூர் மாவட்ட சேஸ் தொண்டு நிறுவனம், மூலமாக தையல் இயந்திரம் இத்தொண்டு நிறுவன இயக்குனர்வின்சென்ட்பவுல் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும் வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நலிந்த ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர சைகிள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் சேஸ் தொண்டு நிறுவன இயக்குனர் வின்சென்ட் பவுல், சேஸ் நிறுவன மேற்பார்வையாளர் அம்மாவாசை மற்றும் தையல் பயிற்சி ஆசிரியர்கள் தாமரைச்செல்வன், விருத்தாள், ரேவதி ஆகியோர்கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

**இந்திய மக்கள் தொடர்பு கவுன்சில்**

24.03.2015




# மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சக்கர சைக்கிள்

திருவள்ளூர், ஜூலை.3-

பேரம்பாக்கம் அருகேயுள்ள கீழச்சேரியில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஏழை எளிய பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கடம்பத்தூர் ஒன்றியக்குழு தலைவர் இரு.வே.தட்சிணாமூர்த்தி தலைமை தாங்கினார். கடம்பத்தூர் ஒன்றிய செயலாளர் சூரகாபுரம் கே.சுதாகர், வின்சென்ட்பால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக டாக்டர் பி.வேணுகோபால் எம்.பி. கலந்து கொண்டு 5 ஊனமுற்றவர்களுக்கு 3 சக்கர வாகனங்களையும், 10 நலிந்த பெண்களுக்கு தையல் எந்திரங்களையும் 200 மாணவ-மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்களையும் வழங்கினார். அப்போது அவருடன் மாவட்ட குழு உறுப்பினர் பாசூரான், மப்பேடு ஊராட்சி மன்ற தலைவர் ஆசிர்வாதம், குமார் உள்பட பலர் உடனிருந்தனர்.

03.07.2015



திருவண்ணாமலை அடுத்த புதுப்பாளையத்தில், செஸ் தொண்டு நிறுவனம் சார்பில், பெண்களுக்கு இலவச தையல் மிஷன்களை பேரூராட்சி உறுப்பினர் ஜஸ்டின் பாண்டியன் வழங்கினார். உடன் தொண்டு நிறுவன இயக்குநர் வின்செண்ட் பால், பேரூராட்சி உறுப்பினர் ஜெயபிரகாஷ் சென்னம்மாள், கலைவாணி ஆகியோர் உள்ளனர்.

## செஸ் தொண்டு நிறுவனம் சார்பில் ஏழை பெண்களுக்கு தையல் இயந்திரம்

**திருவண்ணாமலை, மே 9-**

திருவண்ணாமலை மாவட்டம், புதுப்பாளையத்தில் செஸ் தொண்டு நிறுவனம் சார்பாக கிராமப்புற ஏழை எளிய இளம்பெண்களுக்கு ஒரு மாத இலவச தையல் பயிற்சி நடத்தப்பட்டு அதன்மூலம் பயிற்சி நிறைவு பெற்ற பெண்களுக்கு இலவச தையல் மிஷன் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவுக்கு செஸ் தொண்டு நிறுவன இயக்குநர் வின் செண்ட் பால் தலைமை தாங்கினார். விழாவில் புதுப் பாளையம் பேரூராட்சி உறுப்பினர் ஜஸ்டின் பாண்டியன் ஏழை பெண்களுக்கு இலவசமாக தையல் பயிற்சி அளிக்கப் பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரங்களை வழங்கினார்.

இந்த விழாவில் பேரூராட்சி உறுப்பினர் ஜெயப்பிரகாஷ் சென்னம்மாள் மற்றும் கலைவாணி, தொண்டு நிறுவன பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், மகளிர் குழுவைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர். முடிவில் செஸ் தொண்டு நிறுவன ஒருங்கிணைப்பாளர் மல்லிகா நன்றி கூறினார்.

09.05.2015

## சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் ஏழை பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கும் விழா



திருவள்ளூர், ஜன.12-

கடம்பத்தூர் ஒன்றியம் மப்பேடு ஊராட்சியில் சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் ஏழை. ஏளிய,நலிந்த பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கும் விழா நடந்தது.

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றிய த்திற்குட்பட்ட மப்பேடு ஊராட்சியில் சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் ஏழை. ஏளிய,நலிந்த பெண்களுக்கு தையல் பயிற்சி மற்றும் கணினி பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுவரு கிறது.

ஏழை பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கும் விழவிற்கு சேஸ் தொண்டு நிறுவன இயக்குநர் வின்செண்ட் பவுல் தலைமை தாங்கினார்.தையல் பயிற்சி ஆசிரியை சின்னம்மாள் வரவேற்புரையாற்றினார். தையல் பயிற்சி வகுப்பில் 25-க்கும் மேற்பட்ட ஏழை,எளிய பெண்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

சிறப்பு அழைப்பாளராக சத்தரை ஊராட்சி அரசு பள்ளியின் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் ஜெயராமன் கலந்து கொண்டு பெண்கள் சுயதொழில் கற்றுக்கொண்டு, வாழ்க்கையில் முன்னேற்றமடையவேண்டும் என்று தையல் இயந்திரம் வழங்கும் விழாவில் பேசினார்.பெண்கள் சுயதொழில் கற்றுகொண்டால் அவர்களின் வாழ்க்கை மேன்மையடைவதுடன், வாழ்க்கைக்கு தேவையான தன்னம்பிக்கை வளரும்.குடும்பத்தில் வருமானம் பெருகும் என சேஸ் தொண்டு நிறுவன இயக்குநர் வின்செண்ட் பவுல் கூறினார்.

பின்னர் தையல் பயிற்சியில் நன்கு கற்று தேர்ந்த நலிந்த,மிகவும் பின்தங்கிய 6 ஏழை பெண்களுக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டது. பெண்கள் சுய தொழில் செய்து பொருளீட்ட தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

கண், ரத்த
தானம்
செய்வீர்

12.01.2015

# இளைஞர்களுக்கு கணினி, தையல் பயிற்சி சான்றிதழ் வழங்கும் விழா

திருவள்ளூர், மே.25-

திருவள்ளூர் அடுத்த திருப்பெரும்புதூரில் உள்ள ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் வளர்ச்சி நிறுவனம் மற்றும் சேஸ் தொண்டு நிறுவனம் இணைந்து கணினி பயிற்சி மற்றும் தையற்பயிற்சி நிறைவையொட்டி சான்றிதழ்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் வளர்ச்சி நிறுவனத்தின் இயக்குனர் மைக்கேல் வேத சிரோமணி, தலைமை தாங்கி சான்றிதழ்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் தொழில் பயிற்சி துறை தலைவர் கலியபெருமாள், 80 ஏழை மாணவ மாணவிகளுக்கு புதிய சீருடைகளும் மற்றும் பரிசுப்பொருட்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில், கோபிநாத், சஞ்சய் காந்தகுமார். ரமேஷ் மற்றும் சேஸ் தொண்டு நிறுவன இயக்குனர் வில்சன்ட் பவுள் கலந்து கொண்டு சிறப்பித் தனர்.

கணினி பயிற்சி முடித்த 84 இளைஞர்களுக்கும் தையல் பயிற்சி முடிந்த 32 இளைஞர் களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் வளர்ச்சி மையத்தில் கணினி, தையல் பயிற்சி முடித்த இளைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழாவில், ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் வளர்ச்சி நிறுவன இயக்குனர் மைக்கேல் வேத சிரோமணி பேசும்போது எடுத்த படம்.

25.05.2015

## செங்கத்தில் தையல் பயிற்சி பெற்ற

# மாணவிகளுக்கு இலவச தையல் எந்திரம் வழங்கும் விழா!

செங்கம், மார்ச். 25-

செங்கம் அடுத்த மேல் மன்மலை கிராமத்தில் சேஸ் தொண்டு நிறுவனத்தின் மூலம் ஏழை எளிய 30 பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி அளிக்கப்பட்டு, மேலும் பயிற்சியில் சிறப்பாக பயிற்சி பெற்ற 6 பெண்களுக்கு இலவசமாக பண்ணூர், திருவள்ளூர் மாவட்ட சேஸ் தொண்டு நிறுவனம், மூலமாக தையல் இயந்திரம் இத்தொண்டு நிறுவன இயக்குனர் வின்சென்ட் பவுல் அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும் வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நலிந்த ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர சைகிள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் சேஸ் தொண்டு நிறுவன இயக்குனர் வின்சென்ட் பவுல், சேஸ் நிறுவன மேற்பார்வையாளர் அம்மாவாசை மற்றும் தையல் பயிற்சி ஆசிரியர்கள் தாமரைச் செல்வன், விருத்தாள், ரேவதி ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

25.03.2015

# சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா




திருவள்ளூர்,மே,17.

சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் பழைய பண்ணூர்,திருமணிகுப்பம் ஆகிய கிராமப்புரங்களில் வசிக்கும் ஏழை,எளிய சிறுவர்கள் மற்றும் இருளர் இன மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சேஸ் தொண்டு நிறுவன இயக்குநர் வின் சென்ட்பால் தலைமையில் நடைபெற்றது.

**ஏழை, எளிய மக்கள்**

சேஸ் தொண்டு நிறுவன நிர்வாகிகள் ரேகா,லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கடம்பத்தூர் ஒன்றியம் திருமணிகுப்பம்,பழைய பண்ணூர் கிராமங்களில் வசிக்கும் ஏழை,எளிய இருளர் இன சிறுவர்கள் 80 பேருக்கு புத்தகப்பைகள், நோட்டு புத்தகங்கள், பேனா, பென்சில்கள், ரப்பர், சார்ப்னர்கள், வண்ண கலர்பென்சில்கள் உள்ளிட்டவையும்,55 இருளர் இன மக்களுக்கு உடைகளையும் சேஸ் தொண்டு நிறுவனம் சார்பில் நிறுவன இயக்குநர் வின்சென்ட்பால் வழங்கினார்.

17.05.2017